Tractors and Farm Equipment Limited
77, Nungambakkam High Road
Chennai - 600 034, India
T : +91 44 6691 9000
tafe.com

### ஆசிய-பசிபிக் பிராந்தியம்

# தொழில் துறையில் 8 இந்தியப் பெண்கள் முன்னிலை



சந்தா கோச்சார் | நெய்னா லால் | அருந்ததி பட்டாசார்யா | மல்லிகா சீனிவாசன் | நிஷி வாசுதேவா | ஷிகா சர்மா | சித்ரா ராமகிருஷ்ணா | கிரண் மஜும்தார்-ஷா

## ஃபார்ச்சூன் இதழ் ஆய்வு முடிவு

**நியூயார்க், செப்.22:** ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் தொழில் துறையில் புதிய உத்தியை வகுத்த 25 பெண்களில் 8 இந்தியப் பெண்கள் இடம் பெற்றுள்ளனர். 'ஃபார்ச்சூன்' இதழ் மேற்கொண்ட ஆய்வு முடிவு இதைத் தெரிவிக்கிறது.

'தொழில் துறையில் புதிய உத்தியை வகுத்தோர்' என்ற தலைப்பில், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் தொழில் துறையில் புதிய சாதனைகளைப் படைத்த 25 பெண்களின் பட்டியலை அமெரிக்காவைச் சேர்ந்த ஃபார்ச்சூன் இதழ் வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில், ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் தலைவரான சந்தா கோச்சார் ஆசிய-பசிபிக் பிராந்திய அளவில் 2-வது இடத்தையும், இந்திய அளவில் முதலிடத்தையும் பிடித்துள்ளார்.

இப்பட்டியலில், பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் அருந்ததி பட்டாசார்யா 4-வது இடத்தையும், எச்.பி.சி.எல்.லின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான நிஷி வாசுதேவா 5-வது இடத்தையும், ஆக்ஸிஸ் வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி ஷிகா சர்மா 10-வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

பட்டியலில் ஆஸ்திரேலியாவின் வெஸ்ட் பேக் வங்கியின் தலைவரான கெயில் கெல்லி முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தியாவின் பயோகான் நிறுவனத்தின் தலைவரான கிரண் மஜும்தார்-ஷா 19-வது இடத்தையும், தேசியப் பங்குச் சந்தையின் தலைமை நிர்வாக இயக்குநரான சித்ரா ராமகிருஷ்ணா 22-வது இடத்தையும் பிடித்துள்ளனர். எச்.எஸ்.பி.சி. குழுமத்தின் பொது மேலாளரான நெய்னா லால் கித்வாய் 23-வது இடத்தையும், தமிழகத்தைச் சேர்ந்த டாஃபே நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியுமான மல்லிகா சீனிவாசன் 25-வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

இந்தப் பட்டியலில், அருந்ததி பட்டாசார்யா, நிஷி வாசுதேவா ஆகியோர் புதிதாக இடம்பெற்றுள்ளனர்.

25 பேர் கொண்ட இந்தப் பட்டியலில் 3-இல் ஒரு பங்கினர் இந்தியப் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில் துறையில் பெண்களின் பங்கு அளப்பரியதாக உள்ளது. உயர் பதவிகளை அடைவதில் பெண்கள் தொடர்ந்து சாதனை புரிந்து வருகின்றனர். கடினமான பணிகளிலும் பெண்கள் ஈடுபட்டு, திறமையை வெளிப்படுத்துகின்றனர்.

Tractors and Farm Equipment Limited
77, Nungambakkam High Road
Chennai - 600 034, India
T : +91 44 6691 9000
tafe.com

# ફોર્ચ્યુનની યાદીમાં 8 ભારતીય વગદાર મહિલા

**પીટીઆઇ. ન્યૂયોર્ક**

આઇસીઆઇસીઆઇ બેન્કનાં વડા ચંદા કોચરના નેતૃત્વમાં આઠ જેટલી ભારતીય મહિલાઓએ એશિયા-પેસેફિક વિસ્તારની સૌથી શક્તિશાળી 25 મહિલાઓની ફોર્ચ્યુનની યાદીમાં પોતાનું સ્થાન મેળવ્યું છે. ચંદા કોચર ભારતીય મહિલાઓમાં સૌથી ટોચ પર છે, જ્યારે આ યાદીમાં એસબીઆઇનાં અરૂંધતી ભટ્ટાચાર્ય ચોથા સ્થાન, એચપીસીએલનાં નિશિ વાસુદેવા પાંચમા સ્થાન અને એક્સિસ બેન્કનાં શિખા શર્મા 10મા સ્થાને આવ્યાં છે. ફોર્ચ્યુનની યાદીમાં સૌથી ટોચના સ્થાને ઓસ્ટ્રેલિયાની અગ્રણી બેન્ક વેસ્ટપેકના વડાં ગેઇલ કેલી જોવા મળે છે. ટોપ-25ની યાદીમાં સ્થાન મેળવનારી અન્ય ભારતીય મહિલાઓમાં બાયોકોનનાં વડા કિરણ મજુમદાર, એચએસબીસીનાં નેનાલાલ કિડવાઇ અને ટીએએફઇનાં ચેરમેન અને સીઇઓ મલ્લિકા શ્રીનિવાસનનો સમાવેશ થાય છે.

એશિયા-પેસેફિકની તાજેતરની યાદી બહાર પાડતાં ફોર્ચ્યુન મેગેઝિને જણાવ્યું હતું કે સમગ્ર દુનિયાની મહિલાઓ ટોચના સ્થાન પર પોતાનો પગદંડો જમાવી રહી છે અને તેમાં પણ એશિયા-પેસેફિકની યાદીમાં ત્રીજા ભાગ કરતાં પણ વધારે મહિલાઓ પ્રથમ વખત જ આ યાદીમાં જોવા મળે છે, જેમાં બે ભારતીય મહિલાઓનો પણ સમાવેશ થાય છે. આ યાદીમાં પ્રથમ વખત પોતાનું સ્થાન મેળવનારી મહિલાઓમાં ભટ્ટાચાર્ય અને વાસુદેવાનો સમાવેશ થાય છે.